அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

INTERNATIONAL COUNCIL FOR **EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS**

**அனைத்துலகத் தாய்மொழி நாள் - பெப்ரவரி 21, 2022**

**இந்நாளினை முன்னிட்டு**

**அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை**

**நடாத்தும்**

**கட்டுரை, கவிதைப் போட்டிகள்**

---

தாய்மொழிகளின் சிறப்புகளை உணர்த்தவும் அவற்றைப் பேணிக்காக்க வேண்டியதன் இன்றியமையாமையை வலியுறுத்தியும் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் ஒவ்வோர் ஆண்டும் பெப்ரவரி 21ஆம் நாளினைத் தாய்மொழி நாளாக ஐக்கிய நாடுகள் சபை - யுனசுகோ (UNESCO) நிறுவனம் அறிவித்துள்ளது.

இதனையிட்டு, அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை தமிழ்மொழி ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பொதுமக்களிடம் **தாய்மொழிக் கல்வியின் இன்றியமையாமை, எம் தாய்மொழியாம் தமிழ்மொழியின் சிறப்புகள், தாய்மொழியும் தமிழர் தாயகமும், தாய்மொழியும் கலை பண்பாடும் ஆகிய விடயப்பரப்புகளில்** விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் தேடலை அதிகரிக்கவும் அறிவைப் பெருக்குவதற்குமாகக் கட்டுரை மற்றும் கவிதைப் போட்டிகளை நடாத்துகிறது.

தகைசார் பன்னாட்டுக் குழுவினால் பிரிவுகள் ரீதியாகத் தெரிவு செய்யப்படும் கட்டுரைகள், கவிதைகள் அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் வெளியிடப்பட இருக்கும் மின் நூலில் சேர்த்துக்கொள்ளப்பட இருப்பதுடன், இப்போட்டியில் பங்குபற்றிய அனைவருக்கும் பங்குபற்றியமைக்கான சான்றிதழும் தெரிவு செய்யப்படும் தரமான ஆக்கங்களுக்குச் சிறப்புச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இப்போட்டிகளில் வயதுப்பிரிவுகளின் அடிப்படையில் பங்குபற்ற விரும்புவோர் அனைவரும் பங்குபற்றலாம். ஒவ்வொரு வயதுப்பிரிவுக்கும் கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுள் விரும்பிய ஏதாவது ஒன்றினைத் தெரிவுசெய்து ஆக்கங்களை ஆக்கலாம். விரும்பியவர்கள் அந்தந்த வயதுப்பிரிவுக்குட்பட்டு ஒன்றிற்கு மேற்பட்ட ஆக்கங்களையும் சமர்ப்பிக்கலாம்.

**வயதுப்பிரிவு:**

| **பிரிவுகள்** | **வயதெல்லை** | **பிறந்தநாள்** |
|---|---|---|
| கீழ்ப்பிரிவு | 7 – 11 வயது | 01.01.2011 - 31.12.2015 |
| இடைநிலைப் பிரிவு – 1 | 12 – 16 வயது | 01.01.2006 - 31.12.2010 |
| இடைநிலைப் பிரிவு – 2 | 17 – 21 வயது | 01.01.2001 - 31.12.2005 |
| மேற்பிரிவு | 22 – 27 வயது | 01.01.1995 - 31.12.2000 |
| அதிமேற்பிரிவு | 28 வயதும் அதற்கு மேலும் | 31.12.1994ஆம் நாளும் அதற்கு முன்னரும் |

**கட்டுரைப்போட்டி:**

| பிரிவு | தலைப்புகள் | சொற்கள் |
|---|---|---|
| கீழ்ப்பிரிவு | 1. என் தாய்மொழி தமிழ்<br>2. எம் தமிழ்ப்பள்ளி<br>3. தமிழர் தாயகம்<br>4. நான் மதிக்கும் தமிழறிஞர் | 50 – 75 சொற்கள் |
| இடைநிலைப் பிரிவு – 1 | 1. தாய்மொழிக் கல்வியின் பயன்<br>2. தமிழர் கலைகள்<br>3. புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் தாய்மொழியில் புலமை கொள்வோம்<br>4. எனக்குப் பிடித்த தமிழர் பண்பாடு | 100 – 125 சொற்கள் |
| இடைநிலைப் பிரிவு – 2 | 1. தாய்மொழி கற்போம் தாய்த்தமிழ் காப்போம்<br>2. தாய்மொழிக் கல்வியின் இன்றியமையாமை<br>3. எனதுமொழி எனது அடையாளம்<br>4. புலம்பெயர் நாடுகளில் தமிழ்க்கல்வி | 175 – 200 சொற்கள் |
| மேற்பிரிவு | 1. எமது தாய்மொழியைக் காக்கவும் கற்பிக்கவும் உலகத்தில் முன்னிறுத்தவும் திட்ட வரைபு<br>2. என்னை அடையாளப்படுத்துவது என் தாய்மொழி<br>3. புலம்பெயர் நாடுகளில் தமிழ்மொழிக் கல்விக்கான அங்கீகாரம்<br>4. தமிழர் பண்பாட்டு மரபு | 200 – 250 சொற்கள் |
| அதிமேற்பிரிவு | 1. உலக மொழியாளர்களை வியக்கவைத்த தமிழ்மொழி<br>2. தாயகத்தில் தமிழ்மொழியின் இருப்பைக் காப்போம்<br>3. தமிழ்மொழி உரிமைக்கான தமிழரின் விடுதலைப்போராட்டம்<br>4. தனித்தியங்கும் ஆற்றல் கொண்ட செம்மொழி | 250 – 300 சொற்கள் |

**கவிதைப்போட்டி:**

| பிரிவு | தலைப்புகள் | வரிகள் | |
|---|---|---|---|
| | | ஆகக் குறைந்தது | ஆகக் கூடியது |
| கீழ்ப்பிரிவு | 1. தாயகத்தின் அழகு...<br>2. தமிழே நீ என் அன்னை...<br>3. தமிழால் இணைவோம்!<br>4. தமிழைக் கற்றுத் தரணியில் நிமிர்வோம்! | 4 | 8 |
| இடைநிலைப் பிரிவு – 1 | 1. தாயகத்தில் ஒருநாள்.....<br>2. ஏற்றம் தருவது எம் தமிழ்!<br>3. தாய்த்தமிழால் பெருமைபெற்றோம்...<br>4. என் உணர்வின் மொழி.... | 8 | 12 |

| | | | |
|---|---|---|---|
| இடைநிலைப் பிரிவு – 2 | 1. வாழ்வியலுக்கு இலக்கணம் அமைத்த வளமான மொழி...<br>2. தாய்மொழியில் பற்றுக்கொள்! பிறமொழியைக் கற்றுக்கொள்!<br>3. அன்னை மண்ணை முத்தமிட...<br>4. எங்கும் தமிழ் மணக்க... | 12 | 16 |
| மேற்பிரிவு | 1. சீரிளமைத் திறன்கொண்டாய் வாழிய நீ!<br>2. தாய் மண்ணை நான் ஆண்டால்....<br>3. உயிர்ப்போடு வாழும்மொழி உலகையே ஆளும் இனி!<br>4. அறம் சொல்லி மறம் சொல்லி உரம்தந்த மொழி... | 16 | 20 |
| அதிமேற்பிரிவு | 1. தரணி ஆண்ட தமிழனும் தரணி போற்றும் தமிழும்!<br>2. அன்னை மண்ணின் மடியில்........<br>3. எத்தனை உயிர்கொடுத்தோம் எம் மொழிகாக்க!<br>4. மும்மைத்திறன் கொண்டு முத்தமிழாய் முகிழ்த்தவளே! | 20 | 24 |

இப்போட்டிகளில் உலக நாடுகள் அனைத்திலுமிருந்து தமிழ்மொழி ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் என அனைவரும் கலந்துகொள்ளலாம். ஆக்கங்களை அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையுடன் இணைந்து இயங்கும் கீழ்வரும் கல்விக்கழகங்கள் ஊடாவும் moli@icedt.education எனும் மின்னஞ்சல் மூலமும் அனுப்பிவைக்கலாம்.

| தமிழ்க் கல்விக்கழகம் | தொலைபேசி எண் | மின்னஞ்சல் |
|---|---|---|
| பெல்சியம் தமிழ்க்கலை அறிவுக்கூடம் | +32 466 34 61 74 | Elanela1975@gmail.com |
| கனடா அறிவகம் | +16472177855 | info.arivakamcanada@gmail.com<br>ketharan@gmail.com |
| டென்மார்க் மாலதி தமிழ்க் கலைக்கூடம் | +45 28978209 | info@malathy.dk |
| பின்லாந்து அன்னைபூபதி தமிழ்க் கலைக்கூடம் | +358452102225 | Thinesh1972@yahoo.com |
| யேர்மனி தமிழாலயம் | +491772038326 | Logananthem@yahoo.de |
| இத்தாலி தமிழ்க் கல்விச் சேவை | +39 3287303532 | Moorthyar@gmail.com |
| நெதர்லாந்து திருவள்ளுவர் தமிழ்க் கல்விக் கழகம் | +316 847 97 429 | st.thiruvalluvarnl@gmail.com |
| நோர்வே அன்னைபூபதி தமிழ்க் கலைக்கூடம் | +4740721201 | Nirmalans@annai.no |
| சுவீடன் தமிழ்க் கல்விக் கழகம் | +46707865641 | puntiha@hotmail.com |
| சுவிற்சர்லாந்து தமிழ்க் கல்விச்சேவை | +41444402055 | info@tamilschool.ch |
| ஐக்கியஇராட்சியம் தமிழ்மொழி பண்பாடு மரபுரிமை மேம்பாட்டுக் கூட்டணி | +44 7956533668 | admin@adtamil.co.uk |

**ஆக்கங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய இறுதி நாள் 28.02.2022ஆம் நாள் திங்கட்கிழமை ஆகும்.** முடிவு நாளுக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் கட்டுரைகள், கவிதைகள் போட்டிக்காக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஆக்கங்கள் அனைத்தும் **கையெழுத்துப் பிரதியாக** இருப்பதுடன், ஆக்கங்களுடன் போட்டியில் பங்குபற்றுபவரின் விபரங்களை உள்ளடக்கிய, **இத்துடன் இணைக்கப்பெற்றுள்ள படிவத்தையும் போட்டியாளர் கையெழுத்தில் நிறைவுசெய்து, கையொப்பமிட்டுத் தவறாது அனுப்பிவைத்தல்** வேண்டும். ஒவ்வொரு ஆக்கத்திற்கும் ஒவ்வொரு படிவம் இணைக்கப்பெறல் வேண்டும்.

ஆக்கங்கள் அனைத்தும் A4 அளவு தாள்களில் எழுதப்பெறல் வேண்டும். ஒரு தாளின் ஒரு பக்கத்தினை மட்டும் பயன்படுத்துதல் வேண்டும்.

பங்குபற்றிய அனைவருக்கும் **பங்குபற்றியமைக்கான சான்றிதழும்** தெரிவு செய்யப்படும் தரமான ஆக்கங்களுக்கான **சிறப்புச் சான்றிதழ்களும்** 31.03.2022ஆம் நாளுக்கு முன்னர் மின்னஞ்சல் மூலம் அனுப்பிவைக்கப்படும். பிரிவுகள் ரீதியாகத் தெரிவு செய்யப்படும் கட்டுரைகள், கவிதைகளை உள்ளடக்கி அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் வெளியிடப்பட இருக்கும் **மின்நூல்** பங்குபற்றிய அனைவருக்கும் 30.04.2022ஆம் நாளுக்கு முன்னர் மின்னஞ்சல் மூலம் அனுப்பிவைக்கப்படும்.

அனைவரையும் இப்போட்டிகளில் பங்குபற்றுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். மேலதிக விளக்கங்கள் ஏதாவது தேவைப்படுமிடத்து 0047 407 21 239 எனும் கைத்தொலைபேசி எண்ணில் தொடர்புகொண்டு அல்லது moli@icedt.education மின்னஞ்சல் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

நன்றி.

**அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை**